செய்தி வெளியீடு எண்:122 நாள்: 20.02.2018

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.2.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் சென்னை, கே.கே. நகர் மரவேலைப் பிரிவு திட்டப் பகுதியில் 110 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 407 சுயநிதி திட்ட குடியிருப்புகள் மற்றும் 154 இடமாறுதல் அரசு ஊழியர் குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 23 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேற்பார்வை பொறியாளர்களுக்கான வாடகை குடியிருப்புகள், உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய 541 மனைகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், சென்னை, கே.கே. நகரில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 3.73 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள வாரியத்திற்குத் தேவையான மரப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பயன்பாடு இன்றி உள்ளதால், சென்னை மாநகரத்தின் வீட்டுத் தேவையை கருத்தில் கொண்டு, காலியாக உள்ள இந்த இடத்தில் பன்னடுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை, கே.கே. நகரில் உள்ள மரவேலைப்பிரிவு திட்டப் பகுதியில் 3.73 ஏக்கர் நிலப் பரப்பளவில் 110 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 407 சுயநிதி திட்ட குடியிருப்புகள் (352 மத்திய வருவாய் பிரிவு குடியிருப்புகள் மற்றும் 55 குறைந்த வருவாய் பிரிவு குடியிருப்புகள்) மற்றும் 154 இடமாறுதல் அரசு ஊழியர் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை, மைலாப்பூர், சீத்தம்மாள் காலனியில் 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேற்பார்வை பொறியாளர்களுக்கான 2 அடுக்குமாடி வாடகை குடியிருப்புகள்;

தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் சுயநிதி திட்டத்தின் கீழ் 2 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

விருதுநகர் மாவட்டம், அல்லம்பட்டி மற்றும் வில்லிபத்திரி கிராமங்களில் மனை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 38.91 ஏக்கர் பரப்பளவில் 19 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய 541 மனைகள்:

என மொத்தம் 133 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகள் மற்றும் மனைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 20.2.2018